Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 139

செவ்வாய்க்கிழமை
14 ஏப்ரல் 2026

சித்திரை 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –16
விலை – ரூபா 50



அன்புசால் வாசகர்கள்,
விநியோகஸ்தர்கள், விளம்பரதாரர்கள்
அனைவருக்கும் உதயனின்
சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துகள்



மானிப்பாய்

## மருதடி விநாயகருக்கு இன்று தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப். 14
வரலாற்றுப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவின் தேர்த்திருவிழா பராபவ சித்திரைப் புத்தாண்டு நன்நாளான இன்று நண்பகல் 12 மணிய »15

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலான

# மாற்றுச் சட்டத்தின்மூலம் தமிழர்கள் ஒடுக்கப்படுவர்

அருட்தந்தை சக்திவேல் சுட்டிக்காட்டு



**வவுனியா, ஏப்ரல் 14**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாகக் கொண்டுவரப்படும் மாற்றுச் சட்டத்தால் தமிழர்கள் தொடர்ந்து ஒடுக்கப்படுவார்கள்-இவ்வாறு அரசியற் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.** »15

## வயோதிபப் பெண்ணிடம் தங்கச் சங்கிலி அறுப்பு!

இணுவிலில் துணிகரம்

யாழ்ப்பாணம், ஏப். 14
யாழ்ப்பாணம் - இணுவில் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நேற்று அதிகாலை அத்துமீறி நுழைந்த நபர், மூதாட்டியொருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியைக் கொள்ளையிட்டுத் தப்பியோடியுள்ளார். »15

## மீண்டும் எகிறுகின்றது மசகு எண்ணெய் விலை

விரிவு பக்கம்:- 02

## பொன்னாலையில் கத்திக்குத்து ஒருவர் மருத்துவமனையில்!



யாழ்ப்பாணம், ஏப். 14
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலைப் பகுதியில், கத்திக்குத்துத் தாக்குதலுக்கு இலக்கான நபர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.
இருவருக்கு இடையில் இடம்பெற்ற கருத்து முரண்பாடே »15

## போதை மாத்திரைகளுடன் இரு இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 14
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்த இளைஞர்கள் »15

## சகோதரியைத் தாக்கியவர் கிணற்றில் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஏப். 14
முல்லைத்தீவு- முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கணுக்கேணிப் பகுதியில், தனது சகோதரி மீது கத்திக்குத்துத் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பியோடிய நபர், கிணற்றுக்குள் இருந்து நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
சம்பவம் »15

## மூன்று மாதப் பெண்சிசு நிமோனியாவால் இறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 14
யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியைச் சேர்ந்த மூன்று மாதப் பெண்சிசு, நிமோனியா காரணமாக உயிரிழந்துள்ளது.
கோப்பாய் மத்தி, அம்மன் கோவில் பகுதியைச் சேர்ந்த கஜேந்திரன் கர்ஷா என்ற சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது. »15

வட்டுக்கோட்டையில் கொடூரம்

## கூரிய ஆயுதத்தால் தாக்கி இளைஞர் ஒருவர் கொலை



மேலும் இரு இளைஞர்கள் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன. 14
வட்டுக்கோட்டை - தொல்புரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு கூரிய ஆயுதத்தால் தாக்கி இளைஞர் ஒருவர் படுகொலைசெய்யப்பட்டுள்ளார். மேலும் இரு இளைஞர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.
தொல்புரம், கொட்டியம்பதி ஆதிமுத்துமாரியம்மன் கோவிலடியை சேர்ந்த »15

இளவாலையில்

## வீடொன்றிலிருந்து துப்பாக்கி மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப். 14
யாழ்ப்பாணம் இளவாலைப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து கைத்துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இளவாலைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போதே கைத்துப் »15

## கிணற்றுக்குள் இருந்து பெண் சடலமாக மீட்பு!

முல்லைத்தீவு, ஏப். 14
முல்லைத்தீவு தேராவில் பகுதியில் உள்ள கிணற்றுக்குள் இருந்து 52 வயதுப் பெண்ணொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார்.
கிணற்றுக்குள் சடலம் இருப்பதை அவதானித்த பொதுமக்கள், அது தொடர்பில் பொலிஸாருக்கு »15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இனநல்லிணக்கத்தை வளர்க்காமல் பொருளாதாரப் பலம் சாத்தியமில்லை!

## வெரிட்டே ரிசேர்ச் அமைப்பு சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஏப். 14**

**இலங்கையின் நீண்டகாலப் பொருளாதாரச் செழுமையை உறுதிப்படுத்தவேண்டுமானால், வெறும் நிதி முகாமைத்துவத்துடன் நின்றுவிடாமல், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் மற்றும் ஆழமான கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என 'வெரிட்டே ரிசேர்ச்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி நிஷான் டி மெல் சுட்டிக்காட்டியுள்ளார்.**


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சி நிலையற்றதாக இருப்பதற்கு உலகளாவிய சூழலை விட, உள்நாட்டு நிர்வாகச் சீர்கேடுகளே பிரதான காரணம்.

நாட்டின் பொருளாதாரப் பலத்திற்கும் சமூக நல்லிணக்கத்திற்கும் நேரடித் தொடர்பு இருக்கின்றது.

இலங்கை தற்போது ஒரு தீர்க்கமான கட்டத்தில் இருக்கின்றது. இன்று எடுக்கப்படும் முடிவுகளே அடுத்த தசாப்தத்தின் வெற்றியைத் தீர்மானிக்கும்.

2022இல் ஏற்பட்ட நெருக்கடி, நிதிப்பற்றாக்குறை மக்களின் வாழ்வாதாரத்தை எந்தளவு பாதிக்கும் என்பதற்கான ஒரு கசப்பான பாடம். வெறுமனே கடன் மறுசீரமைப்புடன் மட்டும் நின்றுவிடாமல், நாட்டை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் உடனடி நெருக்கடிகளைச் சமாளிக்கும் குறுங்கால உத்திகளிலிருந்து விலகி, நீண்டகால வளர்ச்சியை நோக்கி நகர வேண்டும். முறையான கட்டமைப்பு மாற்றங்கள் மற்றும் ஊழலற்ற நிர்வாகத்தை உறுதிப்படுத்துதல், நாட்டின் ஏற்றுமதித்துறையை வலுப்படுத்துவதுடன், சீரான பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளை வகுத்தல், பொருளாதாரப் பலத்திற்கு இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் உள்ளிட்ட கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை உடன் மேற்கொள்ள வேண்டும். சாதாரண மக்களின் வருமானம் மற்றும் வேலைவாய்ப்பை மேம்படுத்தாத எந்தவொரு வளர்ச்சியும் முழுமையானது அல்ல. டிஜிற்றல் தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் காலநிலை மாற்றம் போன்ற எதிர்காலச் சவால்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பு விரைவாக மாற்றியமைக்கப்படவேண்டும் - என்றார். (ச-இ)



# குருதியையும், சதையையும் உணவாக உட்கொள்பவர்!

## நெதன்யாகுவுக்கு எதிராக பிரேஸில்ன் ஜனாதிபதி காட்டம்

பிரேசிலியா, ஏப். 14

குருதியையும், குழந்தைகளின் சதையையும் உணவாகக் கொள்ளும் நெதன்யாகுவுக்கு எதிராக, ஏன் சர்வதேசச் சட்டங்கள் அமுலாகவில்லை? என, பிரேஸில் அதிபர் லூலா கேள்வி எழுப்பியுள்ளார்.

லெபனான், காஸா மற்றும் ஈரான் நாடுகளில் இஸ்ரேல் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கை தொடர்பில் பிரேஸில் அதிபர் லூலா டி சில்வா சர்வதேச ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் கூறியதாவது-

நாம் கண்விழிக்கும் ஒவ்வொரு நாளும் இஸ்ரேலால் ஏதோவொரு நாட்டின் மீது பாரிய அழிவு ஏற்படுத்தப்படுகின்றது. இத்தனை அழிவுகளையும் நெதன்யாகு எனும் தனிமனிதனே ஏற்படுத்துகிறார். மனித நேயத்தைத் தனது கால்களால் மிதித்துத் துவைக்கும் அந்த நபருக்கு எதிராகச் சர்வதேச நீதிக் கட்டமைப்புகள் மௌனமாக இருக்கின்றன. இது அவமானத்துக்குரிய விடயம்.

சர்வதேச சட்டங்கள் அனைவருக்கும் பொதுவானவையாக இருக்கவேண்டும். ஆனால், அவை பலவீனமான நாடுகளையும், பலமற்ற மனிதர்களையும் இலக்கு வைப்பதற்காகவே பயன்படுகின்றன. இதை பிரேஸில் கடுமையாகக் கண்டிக்கும் - என்றார். (ம)

# உடலில் மறைத்து கொக்கெய்ன் கடத்திய வெளிநாட்டவர் கைது!

கொழும்பு, ஏப். 14

கொக்கெய்ன் போதைப்பொருளைத் தனது உடலில் மறைத்துக் கொண்டு நாட்டுக்கு வந்த வெளிநாட்டுப் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து சுங்கப் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் உகண்டா நாட்டைச் சேர்ந்த 47 வயதுடைய வர்த்தகர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரிடமிருந்து மீட்கப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி சுமார் ஒரு கோடியே 23 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா என சுங்கப் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# மின்சார உற்பத்திக்கான எரிபொருள் கப்பல் வருகை

கொழும்பு, ஏப். 14

மின்சார உற்பத்திக்கு அவசியமான 30,000 மெற்றிக் தொன் பேர்னஸ் எண்ணெய் அடங்கிய கப்பல் நேற்றுமுன்தினம் நாட்டை வந்தடைந்துள்ளது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்தியுள்ளது. கப்பலில் உள்ள எரிபொருளைத் தரையிறக்கி, கொலன்னாவ எண்ணெய்க் களஞ்சிய முனையத்துக்கு விநியோகிக்கும் பணிகள் தற்போது துரிதமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)





# தரமற்ற கிறீம் தயாரித்த நிறுவனம் முற்றுகை!

மாத்தளை, ஏப். 14

மாத்தளை - கவுடுபெலல்ல பகுதியில், இயற்கை அழகு சாதனப் பொருள்கள் என்ற பெயரில் தரமற்ற கிறீம் வகைகளை வர்த்தக ரீதியில் தயாரித்த நிறுவனமொன்றை நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் முற்றுகையிட்டுள்ளனர்.

இந்தத் தயாரிப்புகள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



# பண்டிகைக் கால மோசடி; 1977க்கு அழைக்கலாம்!

கொழும்பு, ஏப். 14

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் முன்னெடுக்கப்படும் விசேட சுற்றிவளைப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகள் எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளன.

சந்தையில் நீங்கள் ஏதேனும் அநீதிக்கு உள்ளானாலோ அல்லது அதிக விலைக்குப் பொருள்கள் விற்கப்படுவதைக் கண்டாலோ, உடனடியாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 1977 என்ற அவசரத் தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து முறையிடமுடியும். விதிமீறல்களில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வழங்கப்படும் தகவல்களுக்கமைய, அதிகாரிகள் உடனடியாக அந்த இடத்துக்குச் சென்று சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# அதிக பஸ் கட்டண வசூலிப்பு: 1955க்கு அறிவியுங்கள்

கொழும்பு, ஏப். 14

நியமிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூலிக்கப்படும் பேருந்துகள் குறித்து 1955 எனும் இலக்கத்துக்கு முறைப்பாடளிக்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே ஆணைக்குழுவின் செயற்பாட்டு பணிப்பாளர் இதனைத் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media




# அரசாங்கத்துக்கு எதிராக சி.ஐ.டி.யில் முறைப்பாடு

**கொழும்பு, ஏப்.14**

**ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உட்பட, அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் நேற்றுக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றை அளித்துள்ளனர்.**

நிலக்கரிக்கான விலை மனுகோரலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்று கோரியே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விலைமனுவை ஜனாதிபதிக்கு நெருக்கமான ஒருவருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட விதம் தொடர்பான குரல் பதிவு ஒன்று வெளியாகியுள்ளது என்று தெரிவித்து, இந்த முறைப்பாட்டை அவர்கள் சமர்ப்பித்துள்ளனர். ஒரு குரல் பதிவு வெளியாகியுள்ளது. அதைக் கேட்கும்போது அங்கேயும் ஒரு மோசடி நடந்துள்ளது என்பது புரிகிறது. ஜனாதிபதிக்கு மிக நெருக்கமான ஒருவருக்கு இந்த டெண்டரை வழங்க வேண்டும் என்பது தொடர்பான கலந்துரையாடல் அந்தக் குரல் பதிவில் உள்ளது. அந்தக் குரல் பதிவு மற்றும் அதில் இடம்பெற்றுள்ள விடயங்கள் குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு கோரி இன்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளோம் என்று முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். (எ-இ)

## கல்வியியற்கல்லூரிகளில் மாணவர்கள் உள்ளீர்ப்பு

கொழும்பு, ஏப். 14

தேசிய கல்வியியற்கல்லூரிகளுக்கான புதிய ஆசிரிய மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மே 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இந்த நேர்முகத்தேர்வுகள் அந்தந்தக் கல்வியியற் கல்லூரிகளில் நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், தேசிய கல்வியியற்கல்லூரிகளுக்கு ஆசிரியர் பயிற்சிக்காக மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

நேர்முகத்தேர்வுகளுக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பெயர்ப்பட்டியல், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

## மீண்டும் எகிறுகின்றது மசகு எண்ணெய் விலை

கொழும்பு, ஏப்.14

சர்வதேசச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை மீண்டும் 100 அமெரிக்க டொலரைத் தாண்டியுள்ளது. அமெரிக்கா மற்றும் ஈரானுக்கிடையிலான அமைதிப் பேச்சுவார்த்தை உடன்படிக்கையை எட்டாதநிலையில் இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஹோர்மூஸ் நீரிணையை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் முற்றுகையிடப் போவதாக அறிவித்தமையே இந்த விலை உயர்வுக்குப் பிரதான காரணமாகக் கருதப்படுகிறது. உலக சந்தையில் டபிள்யூ.ரி.எவ்.ரக மசகு எண்ணெயின் விலை 104.5 டொலராகவும், ப்ரெண்ட் ரக மசகு எண்ணெயின் விலை 102.8 டொலராகவும் காணப்பட்டது. (எ-இ)

## மட்டக்களப்பில் நரபலி முயற்சி!
### 8 பேர் கைது

மட்டக்களப்பு, ஏப். 14

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்முனைப் பகுதியில், 16 வயதுச் சிறுவன் ஒருவனைப் பலி கொடுத்துப் புதையல் தோண்ட முயன்ற அரச அதிகாரி உள்ளிட்ட எண்மர் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது-

கடந்த மார்ச் 31ஆம் திகதி இரவு மண்முனை ஆலயம் ஒன்றுக்கு அருகாமையில் புதையல் தோண்டியபோது பொலிஸார் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். இதன்போது மொறட்டுவப் பிரதேச செயலக நிர்வாகி, ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய், மொறட்டுவ, கட்டுகஸ்தோட்டை, இங்கிராக்கொடை பகுதிகளைச் சேர்ந்த ஏனைய 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கைதுசெய்யப்பட்ட 8 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட சிறுவனின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, அவரைச் சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்பு இல்லத்தில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-இ)



## வனவிலங்கு இறைச்சியுடன் இருவர் கைது

கொழும்பு, ஏப்.14

வனவிலங்குகளைக் கொன்று அவற்றின் இறைச்சியை வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். யால தேசியப் பூங்காவில் பொலிஸ் அதிரடிப் படை மற்றும் வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் நடத்திய சிறப்புத் தேடுதல் நடவடிக்கையில் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் இருந்து 92 கிலோகிராம் எருது இறைச்சி, உள்ளிட்ட [illegible] ரிக்கப்பட்ட ஒரு துப்பாக்கி, இரண்டு சைக்கிள்கள் மற்றும் மேலும் சில பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரி[illegible] ளது. (எ-இ)

## அலேர்ட்டா இருந்தால்...!

**தக்கன பிழைக்கும் என்டது டார்வின்ர கோட்பாட்டில ஒண்டு. அந்தாள் சொன்னமாதிரி எப்பவும்,எந்தச் சூழலுக்கும் ஏத்தபடி எங்களை நாங்கள்அப்டேட்பண்ணிக்கொண்டேஇருக்கோணும். அப்பிடி ஊரோட ஒத்தோடாட்டி நாங்கள் தன்னந்தனியா நிக்கவேண்டியதுதான். டார்வின்ர கோட்பாட்டை சாதாரண சனம் பின்பற்றுதோ இல்லையோ, கள்ளர் காடர் நல்லாவே பின்பற்றி, தங்களை அடிக்கடி அப்டேட் செய்துகொண்டிருக்கினம். இப்பவெல்லாம் அவையள் பேஸ்புக், இன்ஸ்டாகிராம், ரிக்ரொக் மாதிரியான சமூக வலைத்தளங்களைப் பார்த்துத்தான் களவெடுக்கினம். அவையளின்ர தங்கமுட்டையிடும் வாத்து உந்த சமூக ஊடகங்கள் தான்.**

**அதெப்பிடி பேஸ்புக்கை பாவிச்சுக் களவெடுக்க முடியும் என்டு நினைப்பியள். எங்க களவெடுக்கச் சுகம் என்டு,எங்க போனால் கைநிறையப் பொன்னும் பொருளும் கொண்டுவரலாம் என்டதையும் பேஸ்புக், இன்ஸ்டாகிராமைப் பார்த்தே கள்ளர்மார் 'கல்குலேட்' பண்ணிப்போடுவினம். ஏனென்டால் இப்ப எல்லாரும் வீட்டில என்ன நடந்தாலும், முதல்வேலையா அதை உந்த 'சோல்மீடியாக்களில' போடாட்டி அவைக்குப் பத்தியப்படாது. அதால அவையள் எங்க நிக்கினம், என்ன செய்யப்போயினம், என்னென்ன நகையள் வைச்சிருக்கினம் என்டெல்லாம் கள்ளர் இருந்த இடத்திலேயே வடிவாக் கண்டுபிடிச்சிடலாம்.**

**கொஞ்சக்காலத்துக்கு முதல் ஒரு வீட்டுக்க கள்ளர் புகுந்து அங்க இருந்த ஆக்களின்ர கழுத்தில கத்திய வைச்சு 'எல்லா நகையையும் கொண்டு வாங்கோ' என்டு வெருட்டினவங்கள். அதுக்குப் பயந்து வீட்டுக்காரர் ஒளிச்சு வைச்ச இடங்களில இருந்து கொஞ்சநகையளை எடுத்தந்து குடுத்திருக்கினம். உடனேயே 'முழுநகையையுமெல்லோ கொண்டரச் சொன்னம்' என்டு கள்ளர் உறுக்கியிருக்கிறாங்கள். அதுக்கு 'இவ்வளவுதான் எங்களிட்ட இருக்கு'என்டு வீட்டுக்காரர் சொல்ல கள்ளருக்கு கடுங்கோவம் வந்திட்டு. 'ஆரைப் பேய்க்காட்டுறியள்?' என்டிட்டு தங்கட போனை எடுத்து கொஞ்சப் படங்களை எடுத்துக் காட்டியிருக்கிறாங்கள், அதில நாலைஞ்சு நாளைக்கு முதல் நடந்த ஒரு கலியாண வீட்டில இந்த வீட்டுக்காரர் கனக்க நகையள் போட்டபடி போட்டோக்கள் இருந்திருக்கு. 'இந்தப் போட்டோவில இருக்கிற நகையளை எடுத்தாங்கோ மரியாதையா' என்டு கள்ளர் சொல்ல, வேற வழியில்லாமல் மிச்சநகையளையும் வீட்டுக்காரர் குடுக்க வேண்டியதாப் போட்டுது. அதாலதான் 'இந்த வருசப்பிறப்பு மூட்டம் கண்டபடி பேஸ்புக்கில படங்களைப் போட்டு, கள்ளருக்கு உதவிசெய்ய வேண்டாம்' என்டு பொலிஸும் அறிவிச்சிருக்கு. ஆனால் பொலிஸ் சொல்லி எங்கட ஆக்கள் கேக்கபோயினமோ? அவையள் தங்கடபாட்டுக்கு படங்கள் போடத்தான் போயினம். எங்கட சனத்துக்கு தாங்கள் பட்டுத் தெளியாட்டி புத்தி வராது தானே. தக்கன மட்டும் பிழைக்காது, அலேர்ட்டா இருக்கிறவையும் பிழைச்சுக் கொள்ளுவினம் கண்டியளோ.**

padsi@uthayan.com
- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை






## பொய்யாமொழி

**அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து**
**இன்சொலன் ஆகப் பெறின்**

**பொருள்:** முகம் மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப் பெற்றால், மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையைவிட நல்லதாகும்.


# தேசத்துக்கான திருநாளாகுமா புத்தாண்டு?

இன்று சித்திரைப் புத்தாண்டு. வானியல் ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் ஒரு புதிய சுழற்சியின் தொடக்கம். இலங்கைத் தீவில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒரே நாளில், ஒரே சுபநேரத்தில் கொண்டாடும் ஒரேயொரு பண்டிகை இது மட்டுமே என்பதால், இதனை இன நல்லிணக்கத்தின் முகவரியாகப் பேசுவது ஒரு மரபாகிவிட்டது. ஆனால், கடந்த முப்பது ஆண்டு கால வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால், இந்தச் சித்திரைப் புத்தாண்டு இலங்கை மக்களின் மனநிலையில் இருவேறு துருவங்களையே பிரதிபலித்து வந்துள்ளது. ஒருபுறம் பட்டாசுச் சத்தங்களும், பாற்சோறுடன் ஆடல் பாடல்களுமாகச் சிங்கள மக்களின் கொண்டாட்டங்கள் களைகட்டின; மறுபுறம் அதே நாளில் அதே நிலத்தில் தமிழ் மக்களின் வீடுகள் கண்ணீரிலும், இழப்புகளிலும், இடம்பெயர்வுகளாலும் இருண்டு கிடந்தன. தன் சக இனத்தவன் அடக்கி ஒடுக்கப்பட்டு, அவலக் குரல் எழுப்பிக்கொண்டிருக்கும்போது, அதைக் கண்டுகொள்ளாமல் கொண்டாட்டங்களில் மூழ்குவது உண்மையான 'தேசிய' கொண்டாட்டமாக இருக்கமுடியுமா?

புத்தாண்டு என்பது வெறும் பலகாரங்களிலோ அல்லது புத்தாடைகளிலோ இல்லை; அது ஒரு சமூகத்தின் கூட்டு மனமகிழ்வில் தங்கியுள்ளது. ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரை, சித்திரைப் புத்தாண்டு என்பது இன்றும் ஒரு தீராத வினாக்குறியாகவே நீடிக்கிறது. சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலை, பல தசாப்தங்களாகத் தேடப்படும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உண்மை நிலை, பூர்வீக நிலங்கள் மீது தொல்பொருள் மற்றும் பௌத்த மயமாக்கல் என்ற போர்வையில் நிகழும் ஆக்கிரமிப்புகள் எனத் தமிழினத்தின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாத வரை, தமிழ் மக்களால் எப்படி முழுமனதோடு இந்தப் பண்டிகையைக் கொண்டாடமுடியும்? ஒரு தரப்பு நீதிக்காகப் போராடிக்கொண்டிருக்க, மறுதரப்பு அந்த வலியைப் புறந்தள்ளிவிட்டு மகிழ்ந்திருப்பது, இரு இனங்களுக்கும் இடையிலான இடைவெளியை இன்னும் ஆழமாக்கவே செய்யும்.

இலங்கை ஒரு பல்லின நாடு என்பதை ஆட்சியாளர்களும் தென்னிலங்கைச் சமூகமும் வெறும் வார்த்தைகளால் அல்லாமல் செயலில் அங்கீகரிக்கவேண்டிய தருணம் இது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும், அவர்களின் வரலாற்று ரீதியான இறைமையையும் ஏற்றுக்கொண்டு, ஒரு முறையான சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை எட்டுவதே இந்தத் தீவின் நிரந்தர அமைதிக்கு ஒரே வழியாகும். அதிகாரம் பகிரப்பட்டு, ஒவ்வொரு இனமும் தனது அடையாளத்தோடும் கௌரவத்தோடும் வாழும் சூழல் உருவாகும்போதுதான், சித்திரைப் புத்தாண்டு என்பது பெயரளவிலான நல்லிணக்கப் பண்டிகையாக இல்லாமல், இதயபூர்வமான ஒருமித்த கொண்டாட்டமாக மாறும்.

அரசியல் ரீதியான அடக்குமுறைகளை அகற்றிவிட்டு, தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கும் ஒரு புதிய அரசியல் கலாசாரம் பிறக்கவேண்டும். அப்போதுதான், காணாமல் ஆக்கப்பட்டோரின் கதியறிய வீதியோரப் போராட்டக் கொட்டகையில் இருக்கும் தாயும், தெற்கின் முற்றத்தில் ஊஞ்சலாடும் சிறுவனும் ஒரே மனநிலையில் இந்தப் புத்தாண்டை வரவேற்க முடியும். அந்த உண்மையான 'சுபீட்சமான' புத்தாண்டு மலர்வதற்கு, ஆட்சியாளர்களின் மனமாற்றமும் அரசியல் துணிச்சலுமே இப்போதைய அவசரத் தேவையாகும். இல்லையெனில், சித்திரைப் புத்தாண்டு என்பது ஆண்டுதோறும் கடந்துபோகும் ஒரு நாட்காட்டி மாற்றமாகவே இருக்குமே தவிர, தேசத்தைக் கட்டியெழுப்பும் திருநாளாக ஒருபோதும் அமையாது.



## ஹோர்மூஸ் நீரிணையில் தங்கியுள்ள உலகப் பொருளாதாரப் பாதுகாப்பு!

### போரைக் கைவிடுமாறு ஆசியான் நாடுகள் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஏப். 14**

**அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையே நீடித்து வரும் போர்ப் பதற்றம், உலகளாவிய பொருளாதார வளர்ச்சியைச் சீர்குலைக்கும் எனத் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பான ஆசியான் கவலை வெளியிட்டுள்ளது.**

உலக வர்த்தகத்தின் இதயத் துடிப்பாகக் கருதப்படும் ஹோர்மூஸ் நீரிணை வழியாகவே சர்வதேச எரிசக்தி விநியோகத்தின் பெரும் பகுதி நடைபெறுகிறது.

இந்தப் பகுதியில் ஏற்படும் பதற்றம் எரிசக்தி இறக்குமதியை அதிகம் நம்பியிருக்கும் ஆசிய நாடுகளின் உற்பத்தித்துறை மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விநியோகச் சங்கிலி கடுமையாகப் பாதிக்கப்படும். ஏற்கனவே பல்வேறு பொருளாதாரச் சவால்களை எதிர்கொண்டு வரும் உலக நாடுகளுக்கு, இந்த மோதல் ஒரு புதிய பொருளாதார மந்தநிலையை உருவாக்கும் காரணியாக அமையும்.

இரு நாடுகளும் உடனடியாகத் தாக்குதல் மனப்போக்கைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டும். ஹோர்மூஸ் நீரிணையில் கப்பல் போக்குவரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தச் சர்வதேச விதிகள் பின்பற்றப்படவேண்டும் என்றும் அந்த நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன. (ச-இ-44)



## கணேமுல்லவின் நெருங்கிய சகா இந்தியாவில் கைது

கொழும்பு, ஏப்.14

பாதாள உலகக்குழு உறுப்பினரான கணேமுல்ல சஞ்சீவவின் நெருங்கிய உதவியாளர் ஒருவர் இந்தியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. கம்பஹா பகுதியைச் சேர்ந்த உடுகம பொல அலயா என அழைக்கப்படும் நபரே இந்தியப் பாதுகாப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் தொடர்பான விவரங்களை எதிர்வரும் நாள்களில் இலங்கைப் பொலிஸாருக்கு அறிவித்து, அவரை நாட்டுக்கு அழைத்துவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## வேலைக்காக வெளிநாடு செல்லும் பெண்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.14

இலங்கையின் பெருந்தோட்டப் புறங்களிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காகச் சென்றுள்ளவர்களில் ஆண்களைவிடப் பெண்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது என்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. மாவட்ட ரீதியான பரம்பலை அவதானிக்கும்போது, இலங்கையின் பொருளாதார மையங்களாகத் திகழும் கம்பஹா, கொழும்பு மற்றும் குருணாகலை ஆகிய மாவட்டங்களிலிருந்தே அதிகளவானோர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## தங்கத்தின் விலை வீழ்ச்சி

கொழும்பு, ஏப்.14

சர்வதேசச் சந்தையில் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 4,720.76 அமெரிக்க டொலராக நேற்றுப் பதிவாகியுள்ளது. வெள்ளியின் விலையும் 74.4 அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது. (எ-இ)



## 119 தாமதமெனில் 118க்கு அழைகுக

பொலிஸ் அவசர அழைப்பு இலக்கமான 119க்கு அழைப்பினை மேற்கொள்ளும்போது ஏதும் தாமதங்கள் ஏற்படின் தேசிய உதவி மையமான 118 இற்கு அழைத்து முறைப்பாடு செய்யுமாறு பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

119 அவசர இலக்கத்துக்கு தினமும் 4,000 முதல் 4,500 வரை அழைப்புகள்வருகின்றன.

பொதுமக்களின் தேவைகளுக்கு விரைவாகப் பதிலளிக்கக்கூடியதாகவும் மாற்றுவதற்கான விரிவான சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



நாளை

புதன்கிழமை- சித்திரை 02

15.04.2026

சுபநேரம் : 04.34 – 06.04

ராகுகாலம் : 12.04 – 01.34


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பராபவ நீயும் எங்களை ஏமாற்றி விடாதே! பாங்கான தீர்வதனைத் தா!

பராபவ புதிய ஆண்டே எழுந்து வருக!
தமிழாலுன்னை தமிழ் நிலத்தில் வரவேற்கின்றோம்
நீயாவது ஈழத்தமிழருக்குத் தீர்வு தருவாயா!!
விசுவாவசு நேற்று விடைபெற்றுப் போகிறார்
விரும்பிய எதையுமே எங்களுக்குத் தரவில்லை
நீயாவது பராபவ புதியவளே முயற்சி செய்
எத்தனை முறை கத்திக்கேட்டாலும்
எல்லா ஆண்டுகளும் இப்படித் தான் போகிறது
தமிழரின் பால் தமிழர் வாழ்வதனைப் பார்
தாராளமாக நீயும் விரும்பினால் உதவமுடியும்
பராபவ நீயும் எங்களை ஏமாற்றிவிடாதே!
பாராண்ட இனமும் மொழியும் கலாசாரமும்
சீரான திசையில் பயணிக்க நீ உதவு
வோராடு எங்கள் சுயத்தை நீ பிடுங்காதே
ஆரோடு நோவம் ஆர்க்கெடுத்துரைப்பம்
நேராக வாழ்ந்து உயர்ந்த இனத்துக்கு
நிரந்தரமான விடிவதனை உன் காலத்தில் தா
பராபவ உனக்கு பாராட்டுவிழா எடுப்போம் வா
எங்கள் வாழ்வும் வளமும் தமிழால் உயரட்டும்
பொங்கும் துன்பம் பூமியை விட்டு அகலட்டும்
வா  பராபவ வாஞ்சையோடு வரவேற்கின்றோம்

**மதுரகவி. காரை. எம்.
பி. அருளானந்தன்**

## செருக்கு அடங்குமோ?

போதை ஒழிந்ததா, பூணூல் நெகிழ்ந்ததா,
பாதை உணர்ந்ததா, பரவசம் குறைந்ததா,
வேதம் குறைந்ததோ, விண்ணகம் நிறைந்ததோ,
வாதம் பலித்ததோ, வயிறுகள் நிறைந்ததா?
சேதம் ஓங்குதோ, சேதாரம் கூடுதோ?
சீதைகள் வருந்துமோ, செருக்கு அடங்குமோ?
மேதைகள் வளருமோ, மோதல்கள் குறையுமோ,
மிடுக்காகப் பிறக்குமோ பராபவ பராபரமே!

**கே. எஸ். சிவஞானராஜா**



## பராபவ வருடப்பிறப்பு (வாக்கிய பஞ்சாங்கம்)

**புதுவருடப்பிறப்பு**

14.04.2026 செவ்வாய்க்கிழமை காலை 8 மணி 40 நிமிடத்தில் பராபவ வருடம் பிறக்கின்றது

**மருத்துநீர் வைக்கும் நேரம்**

அதிகாலை 4 மணி முதல் நண்பகல் 12.40 மணிவரை

**கைவிசேடம் பரிமாறும் நேரம்**

14.04.2026 செவ்வாய்க்கிழமை காலை 8.47 மணிமுதல் 9.04 மணிவரை
14.04.2026 செவ்வாய்க்கிழமை பகல் 11.46 மணிமுதல் 12.06 மணிவரை
15.04.2026 புதன்கிழமை காலை 9.04 மணிமுதல் 9.55 மணிவரை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பராபவ புத்தாண்டில் சுபீட்சம் தளைக்கட்டும்



உலகெங்கும் வாழும் தமிழர்களால் உற்சாகமாகக் கொண்டாடப்படும் பராபவ ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு, ஈழத்தின் ஒவ்வொரு இல்லத்திலும் புதிய நம்பிக்கையையும் எழுச்சியையும் விதைக்க வேண்டும்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழிக்கு ஏற்ப, அனைத்து மக்களும் நீண்ட ஆயுளுடனும் உடல் ஆரோக்கியத்துடனும் சுபீட்சமாக வாழ வேண்டும் என்பதே அனைவரினதும் முதன்மைப் பிரார்த்தனையாக உள்ளது.

ஈழ மண்ணில் அமைதியும் ஒற்றுமையும் நிலைபெற்று, தமிழினத்தின் கலை, பண்பாடு மற்றும் பொருளாதார வாழ்வியலில் ஒரு புதிய மறுமலர்ச்சி மலரவேண்டும்.

"தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!" என்ற தாரக மந்திரத்திற்கேற்ப, சத்தியத்தையும் அறத்தையும் நிலைநிறுத்தி, பண்பின் சிகரங்களாக உலகிற்குத் திகழ வேண்டும்.

ஒவ்வொருவர் உள்ளத்திலும் இல்லத்திலும் மகிழ்ச்சி நிறைந்து, இந்த ஆண்டு முழுவதும் தடைகளைத் தகர்த்து வெற்றிகளை வழங்க வேண்டும் என மகிழ்கின்றோம்.

**கலைஞர் கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்**

# மொழிப்பற்றும் சமயப்பற்றுமே வாழ்வில் உயர்வைத் தரும்



மங்கலச்சிறப்புடன் பராபவ எனும் நாமத்துடன் சித்திரைப் புத்தாண்டு மலர்ந்துள்ளது. எமது தமிழ் மக்கள் பல்வேறு இடர்பாடுகளையும் துயரங்களையும் அவலங்களையும் சந்தித்து கடந்து வந்துள்ளார்கள். இன்றுவரை பல்வேறு விதமான உரிமை மறுப்புகளை எதிர்கொண்டு தான் பயணிக்கிறார்கள்.

அண்மையில் வெளியான கல்வி பெறுபேறுகள் சில பெருமையை வழங்கினாலும், சமயம் சார்ந்த நிலையில் பின்தங்கிய நிலையில் உள்ளோம். ஒவ்வொருவரும் மொழியின் மீதும் சமயத்தின் மீதும் பற்றுறுதியுடன் செயற்படவேண்டும்.

அனைவர் வாழ்விலும் அமைதியானது நிலை பெறட்டும். கல்வியிலும் கலைகளிலும் சிறப்புடன் மாணவர்கள் உயர்வு பெறட்டும். அனைவரும் வாழ்வில் சகல செல்வங்களும் பெற்று வளமும் நலமும் பலமும் பெற்று இன்பகரமாக வாழ்க வாழ்க வாழ்கவே என அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

சிவாகமகலாநிதி
**சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்.**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு

பிரதிஷ்டா பூஷணம்.
**சிவஸ்ரீ. சாந்தரூப குருக்கள்.**
செயலாளர், இந்துக் குருமார் அமைப்பு.

# பராபவ புத்தாண்டில் போர் மேகங்கள் கலையட்டும்



மலர்ந்துள்ள பராபவ புத்தாண்டு உலகெங்கும் நிலவும் போர்ச்சூழல்கள் நீங்கி, அமைதி மலர வழிகோல வேண்டும். உலக நாடுகளுக்கிடையே நிலவும் அதிகாரப் போட்டியே போர்ச் சூழலுக்குக் காரணம்.

அரசியல், சமூக மற்றும் சமயத் தலைவர்களிடையே நிலவும் தேவையற்ற போட்டிகள் கவலைக்குரியவை. உலகில் உள்ள வளங்கள் அனைவருக்கும் உரியவை என்பதை உணர்ந்து, தமக்குத் தேவைக்கு அதிகமானவற்றை இல்லாதவர்களுக்குக் கொடுத்து வாழும் 'மாமனிதர்களாக' நாம் மாறவேண்டும். இறைவனை மறந்து வாழ்வதாலேயே பகைமை தோன்றுகிறது. பிரபஞ்ச வளங்கள் அனைத்தும் இறைவனுக்கே சொந்தம் என்ற மனப்பக்குவம் அவசியம். மருத்துநீர் தேய்த்துக் குளித்து, சூரிய பகவானை வழிபட்டு, பெரியோர்களிடம் ஆசி பெற்று, தர்ம காரியங்களில் ஈடுபட்டுப் புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாடுவோம். அனைவரும் எல்லாச் செல்வங்களும் பெற்று வாழ ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானைப் பிரார்த்திப்போம்.



**ஈசான சிவசக்திகிரீவன்**
இந்து சமயப்பேரவை, யாழ்ப்பாணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



யாழ்ப்பாணம் - மண்கும்பான்

# திருவருள்மிகு மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

## குரோதி வருட மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2026

தேர்த்திருவிழா 14.04.2026 செவ்வாய்க்கிழமை

திருச்சிற்றம்பலம்
வெள்ளைப் புற்றடியானே போற்றி!
வீரகத்தி விநாயகனே போற்றி!
மண்கும்பான் பிள்ளையாரே போற்றி!
அடியார்க்கு அருளும் அப்பனே போற்றி! போற்றி!
திருச்சிற்றம்பலம்

தீர்த்தோற்சவம் 15.04.2026 புதன்கிழமை

### மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகரின் வரலாறு

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு பகுதியாக அமைந்திருப்பது தீவகம். தீவகத்தில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் நுழை வாயிலாக அமைந்திருப்பது மண்கும்பான். மணற்கும்பிகளால் நிறைந்திருந்ததால் மண்கும்பான் எனப்பெயர் பெற்றது. நன்னீர் வளத்தால் சிறப்புப் பெற்ற கிராமம் இது. இவ்வூரின் வடக்கும், தெற்கும் கடல் வளம் நிறைந்தது. வெள்ளைக் கடற்கரைச் சுற்றுலா மையம் - சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்த கிராமம் இது. இளந்தென்றல் வீசும் தென்னந் தோப்புக்களும், பல்வகைப் பறவைகள் பண்பாடும் பனந்தோப்புக்களும் இக்கிராமத்தின் அழகை மேலும் அலங் கரிக்கின்றன. மாரி காலத்தில் நீர் நிறைந்த ஓடைகளில் கூட்டம் கூட்டமாகக் காணப்படும் பல்நாட்டுப் பல் இனப் பறவைகளின் அழகோ தனி அழகாகும். இவ்வியற்கை எழில் நிறைந்த கிராமத்தில் தீவகம் யாழ் நெடுஞ்சாலை அருகில் கோயில் கொண்டு வீற்றிருக்கும் விநாயகரே, வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்தி பிள்ளையார் ஆவார். திருவருள் நிறைந்த இப்பதியில் விநாயகர்தானே விரும்பி அமர்ந்தார் என்பது ஆன்றோர்களின் வாய்வழிச் செய்தியாகும். வைத்தி லிங்கச் செட்டியார் ஒரு வணிகப் பெருமகன். அவரும் அவரது உதவியாளரும் தென்னிந்தியாவில் இருந்து மரக்கலம் மூலமாக விநாயகர் சிலையை ஊர்காவற்றுறைக்கு எடுத்து வந்துள்ளனர். யாழ்ப்பாணம் கொண்டு செல்வதே அவர்களது நோக்கமாக இருந்தது. கால்நடையாக யாழ்ப்பாணம் நோக்கி சென்றனர். நடையால் களைப்படைந்த அவர்கள் ஓய்வு எடுக்க எண்ணினர். தாம் கொண்டு வந்த விநாயகர் சிலையை வெள்ளைப்புற்றடி என்னும் இவ் விடத்தில் இறக்கி வைத்துவிட்டு ஓய்வு எடுத்துள்ளனர். ஓய்வு எடுத்து முடிந்ததும் யாழ்ப்பாணம் நோக்கிய தமது பயணத் தைத் தொடரத் தயாராயினர். தாம் இறக்கிவைத்த சிலையைத் தூக்க முயன்றனர். ஆனால் தூக்க முடியவில்லை . பலரும் சேர்ந்து முயன்றும் தூக்க முடியவில்லை. அவர்கள் இச்செய்தியை ஊரிலுள்ள பெரியோர்களிடம் கூறி விநாயகருக்கு இவ்விடத்தில் ஆலயம் அமைத்துப் பராமரிக்குமாறு வேண்டித் தம் பயணத்தைத் தொடர்ந்தனர். ஊர் மக்கள் பனை ஓலையால் குடில் அமைத்து பக்தியோடு வழிபட்டு வந்தனர். வெள்ளைப் புற்றடி ஆலயம் மிகத் தொன்மையானது. இவ்வாலயம் அமைய மூலகர்த்தா வைத்திலிங்கம் செட்டியாரே. வீரகத்தி விநாயகரின் அற்பு- தங்களுக்குப் பல கதைகளை எம்முன்னோர் கூறுவர். வேற்று மதத்தவர் ஒருவர் இவ்வழியால் மாடுகளைக் கொண்டு செல்லும் போது வழிபடாமல் சென்றுள்ளார். அவரது மாடுகள் மறுநாள் காணாமல் போயிற்று. எல்லா இடமும் தேடியும் கிடைக்கவில்லை . இறுதியில் விநாயகருக்குப் பொங்கிவிட்டு வழிபாடாற்றி வீடு செல்லும்போது அனைத்து மாடுகளும் வீட்டில் நின்றன. விநாயகரின் அற்புதத்தை எண்ணி மிகவும் மகிழ்ந்தனர். மண்கும்பான் பிள்ளையாரைப் பற்றி இன்னுமொரு கதையும் கூறுவர். மக்கள், ணிற்காலத்தில் பஸ் போக்குவரத்து ஆரம்பிப்பதற்கு ணின்னர் நடந்து அல்லது வண்டிலில்தான் பிரயாணம் மேற்கொண்டனர். பிரயாணி ஒருவர் யாழ்ப்பாணத்தில் இருந்து மரக்கலத்தில் ஓலையேற்றம் துறைக்கு வந்தார். (இவ்விடம் அல்லைப்பிட்டியில் முன்பு இருகண் மதவு அமைந்த இடத்துக்கு மேற்- கருகில் அமைந்திருந்தது) நடந்து வந்தவர் இரவானதால் ஆலயத்துக்கு அருகில் தங்கலானார்.

விடிந்ததும் கரம்பொனில் உள்ள அவரது வீட்டுக்கு செல்ல இருந்தார். சிறிது நேரத்தில் கூரிய உயரமான கொம்பு கலை- ளயுடைய வெள்ளைநிறமான இரு எருதுகள் பூட்டப்பட்ட வண்டில் ஒன்று வந்து நின்றது. அதனைச் செலுத்தி வந்தவர் அங்கு நின்றவரைக் கேட்டார், ஏன் இந்த இரவில் இங்கு தனிமையாக நிற்கின்றீர். அதற்கு அவர் இருட்டாகி விட்டது. கரம்பொன் செல்லவேண்டும் என்று கூறினார். அதனைச் செலுத்திவந்த வண்டில் சாரதி சொன்னார். நானும் கரம்பொன் போகிறேன். விரும்பினால் நீயும் என் கூட வரலாமே என்று. அவரும் வண்டியில் ஏறிக் கொண்டார். வண்டி புறப்பட்டது. வண்டியில் பூட்டிய எருதுகளின் அழகோ தனியழகு. இருட்டினிலும் ஒளி வீசியது. எருதுகளின் கழுத்தில் இருந்த சதங்கை இன்னிசையாக ஒலித்தது. அவ்வொலி அவர் என்றும் கேளாத தேனிசையாகக் காதில் ஒலித்தது. வண்டியோ காற்றாய் பறந்து சென்றது. வண்டி அவரின் வீட்டைச் சில நொடிகளில் அடைந்தது. அவர் வண்டிலில் இருந்து இறங்கிப் பார்த்தார். வண்டியும் இல்லை. செலுத்தி வந்தவரும் இல்லை. அப்போதுதான் அவர் தெரிந்து கொண்டார் இது மண்கும்பான் பிள்ளையாரின் அற்புதத் திருவிளையாட்டென்று. அதனையெண்ணி அவரும் அவர் சார்ந்தவர்களும் விநாயகரின் கருணையை நினைத்து நினைத்து மகிழ்ந்தனர். அவர்கள் விநாயகரை அளவற்ற பக்தியோடு வழிபட்டு வந்தனர். அவர்களின் பின் வழிவந்தவர்களும் பிள்ளையாரை ஏற்றிப் போற்றி வழிபட்டு விநாயகர் அருள் பெற்று சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள். யுத்த சூழ்நிலையால் சின்னாபின்னமாகிப் போன ஆலயம் பரிபாலன சபையினரால் மீண்டும் 2000 - 2005 ஆண்டுகளில் புனருத்தாரணம் செய்யப்பட்டு. 2005 ஆவணியில் மகாகும்பாபிஷேகம் விமரிசையாக நடாத்தப பட்டது. முன்னர் கட்டுத் தேரில் வீதி உலா வந்தார் விநாயகர். அதனை அழகிய சிற்ப வேலைப்பாடுகளோடு கூடிய சித்திரத் தேராக மாற்றி அமைத்தார்கள் எம்மூரவர்களான அறப்பணியினர். அழகிய சித்திரத்தேரில் அலங்காரம் செய்யப்பட்டு பிள்ளையார் வீதியுலா எழுந்தருளுவார். அதைக் காணாத கண் என்ன கண்ணோ ? அவர் திருவருளை இப்பிறவியில் பெறாதோர் எப்பிறவியில்தான் பெறுவாரோ? ஆலயத்தின் நுழைவாயில் விநாயகரால் ஈர்க்கப்பட்டு வரும் அடியார்களை வருக வருக என வரவேற்று பெறுக! பெறுக! எனது திருவருளை என்று கூறுவது போல் அமைந்துள்ளது. தேர் ணிட்டியும் அழகான கம்பீரமான தோற்றத்துடன் காட்சி யளிக்கின்றது. வேலாயுதர் மடம் தற்போது மிகப்பெரிய மடமாக அமைக்கப் பட்டு அவற்றில் அன்னதானமும் வேறு வைபவங்களும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இச் சேவையோ அளப்பரியது. கோயிலுக்குக் கோபுரம் மிக அவசியமானதாகும். “கோபுர தரிசனம் கோடி புண்ணியம்” என்பது எங்கும் ஒலிக்கும் வாக்காகும். விநாயகர் பேரருளினால் இராஜகோபுரம் அமைக்கும் ஆவல் உருவாயிற்று. நிதியை உதவ உபயகாரர் முன்வந்தார்.கோபுர அமைப்பு வேலைகள் படிப்படியாக நடைபெற்று மிகவும் அழகூட்டப்பட்டு விநாயகப் பெருமானின் திருவருளால் நிறைவை எட்டியுள்ளது. (23.03.2016) இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் கண்டு மகிழ்வுற்று இருக்கின்றோம். ஆலயத்தின் முன்னர் குறிக்கப்பட்ட விழாக்களோடு புதுவருடத் திருவிழா, வளர்பிறை சதுர்- த்தி, சங்காபிஷேகம் போன்ற விழாக்களும் நடைபெறுகின்றன. வெள்ளிக்கிழமை தோறும் அன்னதானம் 2015 இல் இருந்து சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

நியூ மைதிலி
38, 40 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
newmaithily40@gmail.com
newmaithilyjewellers
021 221 7878

சந்தோஸ் ஜுவலர்ஸ்
97A, 99V மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
santhoshjewellers1188@gmail.com
santhoshjewellers
021 221 1188

உதயா ஜுவல்லர்ஸ்
79G கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 074 069 4449 / 021 222 4434
நியூ உதயா ஜுவல்லர்ஸ்
இல: 91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
No: 91, Power House Road, Jaffna.
uthayaajewellersa@gmail.com
uthayaa jewellersa
Tel: 021 222 2031
e-mail: newuthayajewellers@gmail.com

நியூலலிதா நகை மாளிகை
1978 முதல் எமது சேவை
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 077 282 4648
05,06 A9 வீதி, கிளிநொச்சி 077 213 4344

வெஸ்ரன் ஜுவல்லர்ஸ்
இல. 81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6916
076 658 0661

சிங்கப்பூர் ஜுவல்லறி
No.28, Kasthuriyar Road, Jaffna.
078 459 0260,
021 222 3327

நியூ நகுலா ஜுவல்லர்ஸ்
இல.45,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4101

நியூலலிதாஸ் ஜுவல்லறி
இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 224 5511, 021 222 5511

நகுலா ஜுவல்லறி
இல.109, 111 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
077 221 9119, 021 221 9119,
021 222 4134

லலிதா ஜுவலர்ஸ்
75 B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2863, 077 618 3302
145, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
021 221 2462, 077 732 2219

மைதிலி நகைமாடம் (Pvt) Ltd
89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 7902
யாழ் மைதிலி நகைமாடம்
79Z, செட்டியார் தெரு, கொழும்பு - 11
011 239 6239
E-mail: maithilynagaimaadam89@gmail.com

புதிய நதியா நகை மாடம்
இல.73,103, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8397,
021 222 3261

சுபலக்ஷ்மி ஜுவல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7529

நியூ நவீனா ஜுவல்லறி
இல.64, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7114
077 858 7114

நியூ அகிலா ஜுவல்லறி
இலங்கை வங்கி முன்பாக யாழ் வீதி, கிளிநொச்சி.
021 228 4994
074 003 4994

சிறிமதனா நகைமாளிகை
இல. 155M, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7772

சிறி கஜமுகன் ஜுவல்லர்ஸ்
இல.26, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4250
077 542 5720

அருள்விநாயகர் ரேடர்ஸ்
No.106, Stanly Road, Jaffna.
021 222 5558

கந்தவேலன் ரேடர்ஸ்
No.110, Stanley Road, Jaffna.
Tel: 021 222 2822, 077 225 0377

பாலவிநாயகர் மோட்டோர்ஸ்
Dealers in Motor Spare Parts
No.46A, Stanley Road, Jaffna.
Tel: 021 221 7677

அருள்மிகு விநாயகப் பெருமானின் அருளாசி அனைவருக்கும்கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் துணை



புங்குடுதீவு அருள்மிகு கண்ணகை அம்மன் என வழங்கும்

# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் 2026

எம் வினை தீர்க்க கடல் மீது
பேழை தனில் மிதந்து வந்து
பல நூற்றாண்டுகளாய் புங்கைநகர் கரைமீது
கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம் அன்னையே!
உன் பாதார விந்தங்களை சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்

அம்பிகை அடியார்களே!

சிவபூமியாம் இலங்கையிலே சைவம் தழைத்து விளங்கும் யாழ் மண்ணின் தென்னகத்தே சிவசீலர்களும், கொடையில் சிறந்த வணிகப் பேராளர்களும், கல்வியும், கலைகளும் கைவரப் பெற்ற பேரறிஞர்களும் நிறைந்த புங்கை நகரினிலே கண்ணகைபுரம் கண்ணகை அம்மன் எனப் போற்றப்படும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் அம்பாளின் திருவருளால் நிகழும் மங்களகரமான பராபவ வருஷம் சித்திரை மாதம் 04ம் நாள் (17.04.2026) வெள்ளிக்கிழமையன்று கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் காலை, மாலை உற்சவங்கள் எனச் சிறப்பாக இவ்வருடமும் நடைபெறத் திருவருள் கூடியிருப்பதால் இவ் உற்சவ காலங்களில் அம்பிகை அடியார்கள் அனைவரும் ஆசார சீலராய் வருகைதந்து அம்பாளின் திருவருளைப் பெற்று சகல செல்வயோகம்மிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

### கிரியாகால நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| சித்திரை 3ம் நாள் | 16.04.2026 வியாழக்கிழமை | காலை விநாயக வழிபாடு, கண்ணகை அம்மன் திருவிழா, மாலை 3.00 மணிமுதல் பக்திரகாளி அம்மன் திருவிழா, அனுக்கை, கிராம சாந்தி, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரணம் முதலான பூர்வாங்க கிரியைகள் நடைபெறும். |
| சித்திரை 4ம் நாள் | 17.04.2026 வெள்ளிக்கிழமை | காலை 6.00 மணிக்குக் கிரியைகள் ஆரம்பமாகிப் பகல் 10.00 மணிக்குத் துவஜாரோகணம் (கொடியேற்றம்) நடைபெறும். |
| சித்திரை 17ம் நாள் | 30.04.2026 வியாழக்கிழமை | காலை 10.00 மணிக்கு விநாயகப் பெருமான், முருகப் பெருமான், ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆகிய மூர்த்திகள் அழகிய மூன்று சித்திரத் தேர்களில் ஆரோகணித்து வலம் வரும் கண்கொள்ளாக் காட்சி இடம்பெறும். |
| சித்திரை 18ம் நாள் | 01.05.2026 வெள்ளிக்கிழமை | காலை 10.00 மணியளவில் சமுத்திர தீர்த்தம் நடைபெறும். மாலை திருவூஞ்சல், துவஜா அவரோகணம் (கொடியிறக்கம்) மற்றும் சண்டேஸ்வர உற்சவம் நடைபெறும். |

### தினமும் காலை

6.00 மணிக்குத் திருவனந்தல் பால் பூஜை
7.00 மணிக்கு அபிஷேகம்
8.00 மணிக்கு விசேட பூஜை. கொடித்தம்ப பூஜை
9.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை. அம்பாள் திருவீதியுலா

### தினமும் மாலை

4.00 மணிக்கு சாயரட்சைப் பூஜை
4.30 மணிக்கு விசேட பூஜை
5.00 மணிக்கு கொடித்தம்ப பூஜை
5.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை, அம்பாள் திருவீதியுலா

திருவிழாக்கள் காலை 6.00 மணிமுதல் நண்பகல் 1.00 மணி வரையும் மாலை 4.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரையும் நடைபெறும். தினமும் அம்பாள் வீதியுலா வரும் காட்சி இடம்பெறும். திருவிழாக் காலங்களில் தங்களால் இயன்ற பால், தயிர், நெய், தேன், இளநீர் மற்றும் பூ போன்ற அபிஷேகத் திரவியங்களை ஆலயத்தில் வழங்கி அம்பிகை அடியார்கள் யாவரும் ஆசார சீலராய் வருகைதந்து அம்பாளைத் தரிசித்து பேரருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

மஹோற்சவ சிவாச்சாரியார்: "பிரதிஷ்டாரத்தினம்" சிவஸ்ரீ ச. ஸ்ரீ மதுசூதனக் குருக்கள் (சித்தன்கேணி)
ஆலய பிரதமகுரு: சிவஸ்ரீ "பிரதிஸ்டா பூஷணம்" கணேசராஜக் குருக்கள் பகீதரன் ஐயர் (புங்குடுதீவு)

**திருவிழாக் காலங்களில் தினமும் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) நடைபெறும்.**

கண்ணகைபுரம், புங்குடுதீவு-10
தொ.பே: 021 315 6666, 077 717 4279
வெப்: www.kannakaiamman.com
ஈ-மெயில்: temple@kannakaiamman.com

இவ்வண்ணம்: ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையினர்
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media



## 'பூநகரியின் முத்துகள்' கிண்ணம் வென்றது வேரவில் கலைமகள்!

கிளிநொச்சி, ஏப்.14

பூநகரி உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அங்கத்துவக்கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட 'பூநகரியின் முத்துகள்' உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டியில் வேரவில் கலைமகள் அணி வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது. இந்தப் போட்டி பூநகரி குமுழமுனை சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. தொடரின் இறுதி ஆட்டத்துக்கு நாச்சிகுடா சென்.மோரிஸ் அணியினரும் வேரவில் கலைமகள் அணியினரும் தகுதி பெற்றிருந்தனர். கிண்ணத்தை வெல்வதற்காக இரு அணிகளும் மிகத் தீவிரமாகப் போராடின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில், 2:1 என்ற கோல் கணக்கில் நாச்சிகுடா சென்.மோரிஸ் அணியைத் தோற்கடித்து, வேரவில் கலைமகள் அணி வெற்றியைப் பதிவுசெய்தது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கரைச்சிப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சண்முகராஜா ஜீவராஜா, போட்டிக்கான முழுமையான அனுசரணையையும் வெற்றிக்கிண்ணத்தையும் வழங்கிக் கௌரவித்தார். (ச-55)




## கடலட்டை பிடித்த 6 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ்ப்பாணம் நாகர்கோவில் கடற்கரைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கடலட்டைகளைப் பிடித்த 6 சந்தேகநபர்களைக் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்களிடமிருந்து, 939 கடல் அட்டைகள், 2 டிங்கிப் படகுகள் மற்றும் முக்குளிப்பு உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 23 முதல் 37 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் அவர்கள் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கடலலையில் சிக்கி இளைஞர் பலி!

திருகோணமலை, ஏப். 14

திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர்ப் பகுதியில் அமைந்துள்ள வெளிச்ச வீட்டுக் கடற்பரப்பில் நீரில் மூழ்கி 19 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது திடீரென எழுந்த கடலலை காரணமாக இளைஞர் இழுத்துச்செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் பின்னர் அவரது சடலம் மீட்கப்பட்டது. சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

## குடிதண்ணீர் விநியோகம் தடைப்படாது

கொழும்பு, ஏப்.14

தமிழ், சிங்களப் புத்தாண்டுக் காலத்தை முன்னிட்டு நீர் விநியோகம் துண்டிக்கப்படாது எனத் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை தெரிவித்துள்ளது.

மக்களின் தேவை மற்றும் வசதியைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்தச் சபையின் தலைவர் சந்தன பண்டார தெரிவித்துள்ளார். எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பின்னர் நீர் வழங்கல் தொடர்பான விடயங்களை ஆய்வுசெய்து உரிய தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## அக்சயன் ஞாபகார்த்த குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஏப். 14
அண்மையில் வெளியான 2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறு பேறுகளுக்க மையக் கணிதப் பிரிவில் 3ஏ பெறுபேறுகள் பெற்றுச் சாதித்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவனும், இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையத்தின் ஆயுள் அங்கத்தவருமான அமரர். லவன் அக்சயன் ஞாபகார்த்தக் குருதிக்கொடை முகாம் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இணுவில் பொதுநூலக கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவினர் நேரடியாகக் கலந்துகொண்டு குருதிச்சேகரிப்பில் ஈடுபட்டனர். (ச-66)

## அதிர்ஷ்டலாபச் சீட்டில் கிடைத்த 10 இலட்சம் பணத்தினைப் பெற்று வீடு திரும்பியவர் விபத்தில் பலி!

கொழும்பு, ஏப்.14
அதிர்ஷ்டலாபச் சீட்டில் பரிசில் வென்ற பணத்தைப் பெற்றுக்கொண்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த ஒருவர், ஹொரணை பொகுனுவிட்ட பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் உயிரிழந்துள்ளார்.
பத்து இலட்சம் ரூபா பணப் பரிசை வென்றதையடுத்து, அதற்கான காசோலையைப் பெற்றுக்கொள்வதற்காக இவர் தனது நண்பருடன் கொழும்புக்குச் சென்றுள்ளார். பணத்தைப் பெற்றுக்கொண்டு மீண்டும் ஹொரண நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, பொகுனுவிட்ட பகுதியில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. மோட்டார் சைக்கிளைச் செலுத்திய நண்பருக்கு நித்திரை ஏற்பட்டதன் காரணமாக, மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மதகு ஒன்றில் மோதியுள்ளது என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து பயணித்த நபர் உயிரிழந்ததுடன், மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
அம்பலாங்கொடை பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய சண்முகம் ஆனந்தன் என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் ஒரு பிள்ளையின் தந்தை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனந்தனுக்கு சிங்களமொழியில் எழுதத் தெரியாத காரணத்தினால், பரிசுத் தொகையைத் தனது நண்பனின் பெயரிலேயே அவர் பெற்றுள்ளார். அந்தப் பணத்துடன் மகிழ்ச்சியாக வீடு திரும்பியபோதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. (ஏ-இ)

## சட்டவிரோத உப்பள விவகாரம் சுமந்திரன் நேரில் கள ஆய்வு!



முல்லைத்தீவு, ஏப். 14
முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் குஞ்சுக்கால் வெளிப் பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீக விவசாய நிலங்களை மகாவலி அதிகார சபை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து, பெரும்பான்மை இனத்தவருக்கு உப்பளம் அமைப்பதற்காக வழங்கியுள்ள விவகாரம் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் நேற்றுமுன்தினம் நேரில் சென்று ஆய்வுகளை மேற்கொண்டார்.
இந்த விஜயத்தின் போது, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் பாதிக்கப்பட்ட நிலங்களின் உரிமையாளர்களான கொக்குத்தொடுவாய் பகுதி மக்களுடன் சுமந்திரன் கலந்துரையாடினார்.
தொடர்ந்து பிணக்குக்குரிய குஞ்சுக்கால்வெளிப் பகுதிக்கு நேரடியாகச் சென்ற சுமந்திரன், அங்குள்ள நிலைவரங்களைப் பார்வையிட்டார்.
இந்தச் சட்டவிரோத நில ஆக்கிரமிப்பு மற்றும் உப்பள விவகாரத்துக்கு எதிராக நீதிமன்றம் ஊடாகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்வது குறித்து அவர் பொதுமக்களுக்கு ஆலோசனைகளை வழங்கியதுடன், அதற்கான ஆயத்தப் பணிகளை முன்னெடுப்பதாக உறுதியளித்தார். (ச-246)

## மரண அறிவித்தல்

மலர்வு 09.09.1940
உதிர்வு 10.04.2026



### சிதம்பரப்பிள்ளை அப்புத்துரை

**(ஓய்வுபெற்ற அஞ்சலர் உபதபாலகம் நீர்வேலி, இளைப்பாறிய கரப்பந்தாட்ட மத்தியஸ்தர், சமாதான நீதவான் JP, வலிகிழக்கு பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்)**

நீர்வேலி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை அப்புத்துரை அவர்கள் கடந்த (10.04.2026) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை -நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற அப்புத்துரை - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், வசந்தகுமாரியின் பாசமிகு கனவரும், சோபனா (கனடா), ஜனகன் (உபதபாலகம் - நீர்வேலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனஞ்செயன் (கனடா), பிரதீபா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கிருஷிகா (கனடா), பிரவீன் (கனடா), கர்ஷிகா (கனடா), தனிஷா, டீபிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், துரையப்பா - சுசீலாதேவி, வைகுந்தராசா - பத்மகலா ஆகியோரின் சம்பந்தியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி (மில்க்வைற்), நாகேஸ்வரி மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2026) புதன்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :-**
**குடும்பத்தினர்**
**077 912 8855**

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

(CR/47403) J-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 20.08.1945
இறப்பு 12.04.2026



### அப்பாத்துரை குமாரவேலு

**(பிரபல பொருளியல் மற்றும் அரசறிவியல் ஆசிரியர்)**

பொன்னையா லேன், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை குமாரவேலு அவர்கள் நேற்றுமுன்தினம் (12.04.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை - கண்மணி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற பொன்னையா - கண்மணிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற உமா மற்றும், Dr.அகிலன் (பல் வைத்திய நிபுணர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை), யாழினி (ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புத் தந்தையும், கீர்த்திகா (MLT, போதனா வைதியசாலை, யாழ்ப்பாணம்), கோகுலவாசன் (அதிபர் வட்டுக்கோட்டை சுப்பிரமணியம் வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், மனோரஞ்சிதம், முருகையா, தனலட்சுமி, சண்முகலிங்கம் மற்றும் தங்கலட்சுமி (கனடா), பாலபாஸ்கரன் (கனடா), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் வாசுகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், குகவருண், மேதிரா, அக்ஷயா, ஐஸ்வர்யா, அஸ்வினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.


**தகவல்: குடும்பத்தினர்**
**பொன்னையா லேன், ஆனைக்கோட்டை.**
**021 221 3158**

(CR/47405) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப் பிரிவின் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இந்த வருடத்துக்கான பிரதேசமட்ட குழுநிலை விளையாட்டுப்போட்டிகளில் ஆண், பெண் அணிகளுக்கிடையிலான கபடிப் போட்டிகள் அண்மையில் பளை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. போட்டிகளில் ஆண்கள் அணியில் ஆதவன் விளையாட்டுக் கழகமும் பெண்கள் அணியில் அதிசயம் விளையாட்டுக் கழகமும் பிரதேச சம்பியன்களாகின. (ச-9)



# புத்தாண்டுக் கொண்டாட்ட பாரம்பரிய விளையாட்டு!

கிளிநொச்சி, ஏப். 14

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புன்னைநீராவி றோயல் பொது விளையாட்டு மைதானத்தில் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்ட நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

பாரம்பரிய விளையாட்டுகளான வழுக்கு மரம் ஏறுதல், தலையணைச் சண்டை, கிடுகு பின்னுதல், தேங்காய் திருவுதல் போட்டி உள்ளிட்ட பல்வேறு வகையான விளையாட்டுகள் நடத்தப்பட்டன. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கண்டாவளைப் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் சபாலிங்கம் பிலிப் அமலராசா பங்கேற்றார். (ச-113)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற மட்டுவில் பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலய ஐந்தாம் பங்குனித்திங்கள் பொங்கல் உற்சவம் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 5 மணியளவில் சிறப்புப் பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமாகிப் பக்திபூர்வமாகவும், சிறப்பாகவும் இடம்பெற்றது. ஆலய ஐந்தாம் பங்குனித்திங்கள் உற்சவத்தில் பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டனர்.
(ச-66,9,17-131-66)



# ஈழத்தின் மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன் மறைவு!

யாழ்ப்பாணம், ஏப். 14

ஈழத்தின் மூத்த எழுத்தாளரும், ஞானம் சஞ்சிகையின் ஸ்தாபகருமான மருத்துவக் கலாநிதி தி. ஞானசேகரன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தனது 84ஆவது வயதில் கொழும்பில் காலமானார். யாழ். புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானசேகரன் நீண்ட காலம் ஆயுள்வேத வைத்தியராகக் கடமையாற்றியுள்ளார்.

1960ஆம் ஆண்டில் இலக்கியத்துறையில் தடம் பதித்த ஞானசேகரன் சிறுகதைகள், குறுபுதினங்கள், புதினங்கள் எனப் பல நூல்களை எழுதியுள்ளார்.

அவரது மலையக மக்களின் வாழ்வியலையும், அவர்கள் படும் துயரங்களையும் எடுத்துச் சொல்லும் 'குருதி மலை' எனும் நாவலும், ஈழத்து விடுதலைப் போராட்டத் தொடக்கத்தையும், தமிழ் இளைஞர்கள் ஏன் ஆயுதம் ஏந்திப்போர் செய்தார்கள்? என்பதையும் உணரவைக்கும் 'அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்' எனும் சிறுகதைத் தொகுதியும் பல்கலைக்கழகப் பாடநூல்களாக அங்கீகாரம் பெற்றுள்ளன. ஈழத்துப்போர் இலக்கியங்களை ஆவணமாத்தியதில் ஞானசேகரனின் வகிபாகம் முக்கியத்துவமானது.

இதேவேளை, மலையக மக்களால் 'மருத்துவக் கடவுள்' எனப் போற்றப்பட்ட ஞானசேகரன் தமது படைப்பாற்றலால் தன் வாழ்நாளில் பல விருதுகளைக் குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-66)



THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

**VACANCY ANOUNCEMENT FOR TEMPORARY TRANSLATORS – 4 Positions**

**About Us**

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict.

HALO is known for its work to clear landmines, but we also lead on dealing with unexploded ordnance, from bullets to aircraft bombs, and we educate communities to keep them safe. We also build safe arms stores and systems for securing guns. HALO was established in Afghanistan in 1988 and now employs over 9,500 staff in 28 countries and territories.

HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,300 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu. To date, HALO has safely destroyed over one million items of explosive ordnance, including more than 270,000 anti-personnel landmines. The explosive ordnance contamination is a result of over three decades of civil war that ended in 2009. HALO and other mine action stakeholders are working to clear Sri Lanka of all known contamination by 2028 to meet Sri Lanka's obligations as a state party to the Anti-Personnel Mine Ban Convention.

**Job Overview**

We are looking to recruit **4 Translators** for the duration of the Field Officer course from **May to July 2026**. The translators will support a cohort of international HALO staff for the duration of their training course. This will mostly require oral translation support (English-Tamil) during the trainees' deployment to HALO's minefields. We are hoping to attract students from Jaffna university who are interested in signing a **two-month contract** with us.

This is a **short-term, temporary contract** from 21 May to 20 July 2026.

**Requirements for this position**


- Fluency in **Tamil** and **English**, to provide oral translation support.
- Translators must be comfortable working outdoors, waking up early and walking around in the minefields.
- Translators must be able to get to the main office in Kilinochchi by themselves. Transportation to the field locations will be provided by HALO.
- Translators must be willing to stay overnight at HALO's base in Kokkuthoduvai.
- Translators must be available to start from the first week of May to receive a one-week induction to familiarize themselves with technical mine action terminology and to receive a full safety brief.
- Working hours are based on the training schedule and may include working on weekends.
- Translators will receive a monthly salary of 90,000 Rs.

Interested candidates must submit their CV on or before **21 April 2026** with their name and contact details to the address below or via email. Female candidates are encouraged to apply.

HR Manager
The HALO Trust,
450 Thirunagar West, Kilinochchi
hr@halosrilanka.org

The HALO Trust is a company limited by guarantee
Registered in England No. 2228587 Registered Charity No. 1001813 & SC037870 Registered Office: 50 Broadway, London SW1H 0BL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# மின்கம்பத்துடன் மோதி கவிழ்ந்தது ஹைஏஸ்!

## 7 பேர் அருந்தப்பு

யாழ்ப்பாணம், ஏப். 14
ஹைஏஸ் ரக வாகனம் ஒன்று மின்சாரக்கம்பம் ஒன்றின் மீது மோதி வயல் நோக்கிப் பாய்ந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது.
இந்த விபத்து யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது. நாகர்கோவில் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஹைஏஸ் பிறிதொரு வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்டபோது மதகொன்றுடன் மோதி, அதை உடைத்துக் கொண்டு பின்னர் மின்சாரக்கம்பம் மீது மோதி வயல் நோக்கிப் பாய்ந்து விபத்துக்குள்ளாகியது. ஹைஏஸ் வாகனத்தில் ஏழு பேர் காயங்கள் எதுவுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். விபத்துத்தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் விசாரணைகள் முன்னெடுத்துள்ளனர். (ச-66-27)



வீதிப் பாதுகாப்பு முக்கியத்துவம் மற்றும் அதனை மீறுவதால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பாடசாலை அதிபரின் வழிகாட்டலின் கீழ் அண்மையில் நடைபெற்றது. (ச)

### மருதடி...

ளவில் இடம்பெறவுள்ளது.
இன்று அதிகாலை அபிஷேக வழிபாடுகள் ஆரம்பமாகும். காலை 6 மணியளவில் பூஜை வழிபாடுகள் இடம்பெறும். முற்பகல் 10 மணியளவில் வசந்தமண்டபப் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் சித்திரத் தேரில் விநாயகப் பெருமான் வீதி வலம் வரும் காட்சி நடைபெறும். மாலை 3 மணியளவில் சித்திரத் தேரிலிருந்து விநாயகப் பெருமான் பச்சை சாத்தி அவரோகணம் செய்யும் திருக்காட்சி இடம்பெறுமென ஆலயத் தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-66)

### வயோதிபப்...

இணுவில் தெற்குப் பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய மூதாட்டியிடமே இவ்வாறு கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் இடம்பெற்றபோது, குறித்த மூதாட்டியின் கணவர் குளியலறைக்குள் நின்றார் எனக் கூறப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில் அவர்கள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-66)

### மாற்றுச்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்தகால அரசாங்கங்கள் தங்களின் பிழையான பொருளாதார மற்றும் அபிவிருத்திக் கொள்கையாலும் ஊழல்கள் மற்றும் மோசடிகள் காரணமாகவும் நாடு பாதாளத்தில் வீழ்ந்தபோதெல்லாம் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள இனவாதத்தை கையில் எடுத்தன. அதேபாதையில் தற்போது தேசிய மக்கள் சக்தியும் பயணிக்க முனைவது ஆச்சரியமான விடயமல்ல. மாற்றத்தை மகுடமாக்கி ஆட்சியை தமதாக்கிய தற்போதைய அரசாங்கம், மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல், 'நிலக்கரி ஊழல்' காரணமாக மூக்குடைபட்டு நிற்கின்றது.
தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான தொடர் போராட்டம், இரண்டு வருடங்களுக்கு மேலாக நடந்து வருகின்றது. நடந்த பிழையை ஏற்றுக்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்ட தவறிய ஜனாதிபதி, அந்தப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் நோக்கில் கருத்து தெரிவித்ததை நாம் அறிவோம்.
யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது அதற்கான ஆதரவை அன்றைய அரசுக்கு நேரடியாக வழங்கிய மக்கள் விடுதலை முன்னணி, படைக்கு இளைஞர்களையும் திரட்டிக் கொடுத்தது. இதன் தொடர்ச்சியாகத் தற்போது தொல்லியல் திணைக்களம் ஊடாக எமது காணிகளைக் கைப்பற்ற நினைக்கின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக, 'பயங்கரவாதத்தில் இருந்து அரசாங்கத்தைப் பாதுகாக்கும் சட்டத்தை' தேசிய மக்கள் சக்தியினர் கொண்டுவர முனைகின்றமை தமிழர்கள் மீதான போரின் மற்றொரு அம்சமே.
தமிழர்களின் தேசிய அரசியலுக்கு எதிராகவும், தாயகக் கோட்பாட்டுக்கு எதிராகவும் தற்போதைய அரசு தீவிர செயற்பாட்டை முன்னெடுப்பது தெளிவு. தெற்கின் அரசியல் செயற்பாடுகள் தமிழ்த் தேசத்தின் இருப்பைச் சவாலுக்கு உட்படுத்தும் இந்தக் காலத்தில், தமிழ்த் தரப்புகள் ஒன்று பட்டுச் செயற்பட வேண்டியது அவசியம் - என்றார். (அ-ம)

### போதை...

இருவரும் விற்பனை செய்யும் நோக்கில் போதை மாத்திரைகளை உடைமையில் வைத்துள்ளனர் என்று பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே, அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.
சந்தேகநபர்கள் 18 மற்றும் 25 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர்களை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும் நகர்வுகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-23)

### கூரிய...

குகதீஸ்வரன் மயூரன் (வயது-27) என்பவரே உயிரிழந்தவராவார்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-
ஒரே ஊரைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களுக்கு இடையில் கடந்த 2021 ஆம் ஆண்டுமுதல் முரண்பாடு நிலவி வந்துள்ளது. நேற்றுமுன்தினம் இரவு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றபோது அந்தப் பகுதிக்கு மூன்று நண்பர்களுடன் வந்த பிரதான சந்தேகநபர், இளைஞர் ஒருவருடன் (உயிரிழந்தவரின் நண்பர்) முரண்பாட்டில் ஈடுபட்டதுடன், அவர் மீது தாக்குதலும் நடத்திவிட்டுத் தப்பிச்செல்ல முற்பட்டுள்ளார். இதன்போது தாக்குதலாளிகளைப் பிடிக்க முற்பட்ட வேளையிலேயே, உயிரிழந்தவர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்திய சந்தேகநபர், தனக்குக் காயம் இருப்பதாகத் தெரிவித்து முறைப்பாடு செய்வதற்காக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளார். கொலைச்சம்பவம் தொடர்பில் அப்போது எதுவும் அறிந்திருக்காத பொலிஸார், அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். அதன் பின்னர் சம்பவம் தொடர்பில் தகவல் வழங்கப்பட்டதும், மருத்துவமனையில் வைத்து அவரைப் பொலிஸார் கைது செய்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் தப்பிச் சென்றுள்ள நிலையில், அவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. (அ-ம-27)

### சகோதரியைத்...

தொடர்பில் தெரியவருவதாவது:-
முல்லைத்தீவு - கணுக்கேணி பகுதியில் வசிக்கும் சகோதரர்களுக்கு இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இது பின்னர் கைகலப்பாக மாறிய நிலையில், சகோதரி மீது குறித்த நபர் கத்திக்குத்துத் தாக்குதலை நடத்தியுள்ளார். அவர் தலைமறைவான நிலையில், அவரை பொலிஸாரும் உறவினர்களும் கடந்த இரண்டு நாள்களாகத் தேடிவந்தனர். இவ்வாறான நிலையிலேயே, குமுழமுனைப் பகுதியில் உள்ள கிணற்றுக்குள் இருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
தாக்குதலுக்கு உள்ளான சகோதரி கிராம அலுவலர் என்பதுடன், அவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-113)

### வீடொன்றிலிருந்து...

பாக்கி மீட்கப்பட்டுள்ளது. துப்பாக்கியை ஆய்வுக்கு உட்படுத்தும் பணிகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். அத்துடன் மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. (அ-ம)

### கிணற்றுக்குள்...

வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே சடலம் மீட்கப்பட்டுள்ளது.
உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் மாஞ்சோலை மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-55)

### மூன்று...

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-
நேற்று அதிகாலை 3 மணியளவில் குழந்தைக்குத் தாயார் பாலூட்டியுள்ளார். அதன்பின்னர் காலை 6 மணியளவில் குழந்தையைப் பார்த்தபோது, மூக்கால் பால் வெளிவந்த நிலையில், குழந்தை விறைப்புத் தன்மையுடன் காணப்பட்டுள்ளது. இதையடுத்து, உடனடியாக மருத்துவமனைக்குச் சென்றபோது, அந்தக் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டது என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர். நிமோனியா காரணமாக குழந்தை உயிரிழந்ததாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

### பொன்னாலையில்...

கத்திக்குத்துத் தாக்குதலில் முடிந்துள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## பூப்பந்தாட்டப் பயிற்சி

முல்லைத்தீவு, ஏப்.14

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இளையோருக்கான பூப்பந்தாட்டப் பயிற்சியும் போட்டியும் கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட பூப்பந்தாட்ட உள்ளக அரங்கில் நடைபெற்றது. தமிழர் புலம்பெயர் பூப்பந்தாட்ட அமைப்பான யு.பி.எல். அமைப்பின் நிதியனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் விளையாட்டுத்துறை பூப்பந்தாட்டச் சங்கமும் வடமாகாண பூப்பந்தாட்டச் சங்கமும் இணைந்து இந்த நிகழ்வை முன்னெடுத்தன. (ச)

ஈரான் - அமெரிக்கா இடையிலான

# நீண்ட பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது

## அணுவாயுதத்தைக் கைவிட ஈரான் மறுப்பு



இஸ்லாமபாத், ஏப். 14

**பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்ற, ஈரான் - அமெரிக்கா இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தை இணக்கப்பாடுகள் இல்லாமல் முடிந்துள்ளது.**

மத்திய கிழக்கில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் பாகிஸ்தானின் இஸ்லாமபாத் நகரில் கடந்த சனிக்கிழமை அமைதிப் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. பல்வேறு சுற்றுக்களாக இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெற்ற போதிலும், பிரதான முன்மொழிவுகளில் இணக்கப்பாடுகள் ஏற்படவில்லை.

ஈரான் அணுவாயுதத்தை தயாரிக்கக்கூடாது. அத்துடன், அணுவாயுதங்களை விரைவாகத் தயாரிக்கும் கருவிகளையும் நாடக்கூடாது என்று அமெரிக்காவால் முன்வைக்கப்பட்ட பிரதான நிபந்தனையை ஈரான் திட்டவட்டமாக நிராகரித்துள்ளது. இதையடுத்து, பேச்சுவார்த்தையில் பங்கேற்ற அமெரிக்கக் குழுவினர் உடனடியாகப் பாகிஸ்தானில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர். அமெரிக்காவின் துணை அதிபர் வான்ஸ், தமது நிபந்தனைகளை ஈரான் முற்றாகப் புறக்கணித்ததை ஏற்க முடியாது என அதிருப்தியை வெளியிட்டுள்ளார். இந்த நிலைப்பாடு காரணமாக ஈரான் பெரும் அழிவுகளைச் சந்திக்கும். அவர்கள் அதி விரைவாக தமது எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ம)



## ராஜஸ்தானை வீழ்த்தி ஹைதராபாத் அபாரம்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் 57 ஓட்டங்களால் ராஜஸ்தானை வீழ்த்தியது ஹைதராபாத்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக இஷான் கிஷான் 91 ஓட்டங்களையும், கிளாசன் 40 ஓட்டங்களையும், ரெட்டி 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆர்ச்சர் 2 விக்கெட்டுகளையும், சன்டீப் சர்மா, தேஷ்பாண்டே, பராக் ஆகியோர் தலா கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு முன்வரிசை வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். ஓர் ஓவரில் 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார் ஹிங்கி. 9 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து பரிதவித்தது ராஜஸ்தான். எனினும், ஜடேஜாவும், பெரீராவும் இணைந்து அணியைக் கௌரவ நிலைக்கு அழைத்துச் சென்றனர். இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டன. 69 ஓட்டங்களுடன் பெரீராவும், 45 ஓட்டங்களுடன் ஜடேஜாவும் ஆட்டமிழந்தனர். முடிவில் 159 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளை யும் இழந்து 57 ஓட்டங்களால் தோல்வியடைந்தது ராஜஸ்தான். (ம)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகையம்மன் ஆலய சப்பறத் திருவிழா நேற்றுமுன்தினமும் தேர்த்திருவிழா நேற்றும் பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச)



தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு கரவெட்டிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம், மாகாண தொழிற்றுறைத் திணைக்களம் மற் றும் சிறு தொழில் முயற்சிப் பிரிவும் இணைந்து நடத்திய புதுவருட வர்த்தக கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் பிரதேச செயலாளர் திருமதி உமாமகள் மணிவண்ணன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. ச-100)


வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் வேலைக்கு ஆட்கள் தேவை.

துப்புரவு பணியாளர்
(ஆண், பெண் இருபாலாரும்)

ஆர்வமுள்ளவர்கள்
நேரில் சமூகம் தரவும்.



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

N.S Nimal Welding Work Shop

வீடுகள் மற்றும்
வணிக
நிறுவனங்களிற்கான
யன்னல்கள்,
வாயில்கள், கிரில்கள்
மற்றும் உலோக
வேலைப்பாடுகள்




நவீன முறையிலும், உறுதியாகவும், மலிவாகவும்
வாடிக்கையாளர்களுக்கு ஏற்ற வடிவமைப்பில்
செய்து தரப்படும்.

A9 வீதி, புத்தூர் சந்தி, சாவகச்சேரி, பளை
077 345 6552, 077 183 3456
+44 743 889 2173




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில்14.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media